என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே இது அரசுப் பொறுப்பிலேயே இருக்கலாம் என்று அரசு கருதுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பிலே இருந்தாலும், அது அரசின் பொறுப்பிலே இருப்பதாகத்தான் பொருள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5,000 ரூபாய் செலவில் அதைப் புதுப்பிக்கலாம் என்று சொன்னார்கள். அதைவிட கொஞ்சம் அதிகம் செலவு செய்து சிறப்பாகச் செய்ய யோசிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆரம்பத்திலே 5,000 ரூபாய் போதுமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியின் அடிப்படையிலே வேண்டுமானால், அதைப் பற்றி ஆராய்ந்து சிறப்புடையதாகச் செய்வதில் அரசிற்கு எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது.

Bonus to Teachers.

* 32 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the bonus sanctioned to teachers in Non-Government Educational Institutions in G.O. Ms. No. 1243, Education, dated 20th July 1971 has been paid to such teachers; and

(*b*) if not, the reasons therefor?

ஆசிரியர்களுக்கு பூரிப்பூதியம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 20—7—1971 நாளிட்ட 1243-ஆம் எண் அரசு ஆணையில் அரசு நிறுவனமல்லாத கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பூரிப்பூதியம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?

1974 சனவரி 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) நீலகிரி மாவட்டத்தில் மூவருக்கு இந்த போனஸ் தொகை தரப்பட வேண்டும். தவிர இந்த போனஸ் பெறத் தகுதியுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் போனஸ் தொகை வழங்கப்பட்டுவிட்டது. மேற்சொன்ன மூவரில் ஒருவர் இறந்து விட்டார். மற்ற இருவர் அத்தொகையைப் பெற அரசு கருவூலத்திற்கு வாராததாலேயே தரப்படவில்லை. வந்து கேட்டவுடன் அவர்களுக்கும் வழங்கப் படும்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்கு பூரிப்பூதியம் வழங்குகிற திட்டத்தினுடைய விளக்கங்களைத் தர இயலுமா என்று அறிய விரும்புகிறேன். பூரிப்பூதியம் எதற்காக வழங்கப்படுகிறது? என்ன காரணத்தால் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டாவது சம்பளக் குழு இதுபற்றி "as a gesture, consider the payment of an ex-gratia (non-recurring) lumpsum bonus to the existing pensioners as one month's pension, subject to a maximum of Rs. 100" என்று சிபார்சு செய்திருந்தார்கள். அந்த சிபார்சை ஏற்றுத் தான் 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பெறுகின்ற பென்ஷன் அடிப்படையில் 2—10—1970 அன்றும் அதற்கு முன்னும் ஓய்வு பெறுகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 2—10—1970-க்குப் பிறகு ஓய்வு பெறுகிறவர்களுக்கு அத்தகைய நிலைமையில்லை.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, 22—10—1970-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்குத் தரப்படுகிற பூரிப்பூதியம் ஊதியக் குழு பரிந்துரையின் படி தரப்படுகிறது. இப்படிப்பட்ட பூரிப்பூதியத்தை, பல்வேறு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் மிகச்சிறப்பாகப் பணியாற்றுகிற ஆசிரியர்கள் எல்லோருக்கும் பட்டயம் கொடுக்க முடியாது என்ற காரணத்தால் மிகச் சிறப்பாகப் பணியாற்றி மாணவர்களுடைய நல்ல வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறுகிற நேரத்திலே தருகிற திட்டத்தை அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 2—10—1970-க்கு முன்னால் ஓய்வு பெற்று பென்ஷன் வாங்குகிற அனைவருக்கும் 100 ரூபாய் என்ற அளவுக்கு subject to a maximum of Rs. 100 என்ற

போனஸ் திட்டம் தரப்பட்டிருக்கிறது. இதன்படி தரப்படாதவர்கள் 3 பேர்தான். அவர்களும் வந்து கேட்டபிறகு 2 பேருக்குத் தருகிற நிலை இருக்கிறது என்றுதான் நான் முதலில் குறிப்பிட்டேன்.

B.A., B.Sc. Graduates.

* 33. *Q.*—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any B.A., B.Sc., graduates working in Colleges have been ousted from service during 1971-72; and

(*b*) if so, the names of the colleges in which that was done and the reasons therefor?

பி.ஏ., பி.எஸ்.ஸி. பட்டதாரிகள்

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் பணிபுரிந்து வந்த பி.ஏ., பி.எஸ்ஸி பட்டதாரிகள் 1971-72-ம் ஆண்டில் எவரேனும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், எந்தெந்தக் கல்லூரிகளில் என்ன காரணத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) &(இ) கல்லூரிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன், முதுகலைப் பட்டப் படிப்பில் முதல் அல்லது இரண்டாவது வகுப்பில் தேறியுள்ளவர்கள் தான் அரசினர் கல்லூரிகளில் போதனாசிரியர்களாகவும் செய்முறை விளக்குநர்களாகவும் நியமனம் செய்யப்படலாம் என்று ஆணை வெளியிடப்பட்டதின் விளைவாக, தகுதியில்லாத 139 பி.ஏ., பி.எஸ்ஸி பட்டதாரிகள் 1971-72-ம் ஆண்டில் 55 கல்லூரிகளிலிருந்து (33 அரசினர் மற்றும் 22 தனியார்) தற்காலிகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாகவே பணியாற்றியிருந்தார்கள்.

திரு. கே. எஸ். கணபதி: இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபார்சுகளில் பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்ற டியூட்டர், டெமான்ஸ்டிரேடர்களுக்கு இடம் வைத்து, அவர்களுக்கு ரூ. 325 அடிப்படைச் சம்பளத்தில் ஒரு ஊதிய